### கடந்த தேர்தல்களின் போது

# அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்டு நிறைவேற்றப்படாத வாக்குறுதிகள்!

## சட்டப் பேரவையில் அமைச்சர் எ.வ.வேலு அடுக்கடுக்காக பட்டியலிட்டார்!

சென்னை, ஜன. 24-

சட்டப் பேரவையில் ஆளுநர் உரை மீதான விவாதத்தில் அ.தி.மு.க. உறுப்பினர் தங்கமணி தி.மு.க. தேர்தல் அறிக்கையில் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என்று கூறியபோது பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில் கூறிய வாக்குறுதிகளில் நிறைவேற்றப்படாத வாக்குறுதிகளை அடுக்கடுக்காக பட்டியலிட்டார்.



சட்டப் பேரவையில் அ.தி.மு.க. உறுப்பினர் பி.தங்கமணி பேசும் போது குறுக்கிட்டு அமைச்சர் எ.வ.வேலு பேசியதாவது:-

நீங்கள் கேள்வி கேட்டிருக்கிறீர்கள். அதற்கு நான் பதில் சொல்ல வேண்டும். தேர்தல் காலங்களிலே இவைகளெல்லாம் நாங்கள் செய்வோம் என்று எல்லா அரசியல் கட்சிகளும் வாக்குறுதிகளைக் கொடுப்பது உண்டு. ஆளுங்கட்சியில் இருப்பவர்களுக்கு அதை நிறைவேற்ற வேண்டிய ஒரு கடமை இருக்கிறது. தேர்தல் அறிக்கை எழுதுகிற போது, ஆட்சியில் இல்லாத போது சில நேரங்களில் எழுதுவோம். ஆட்சிக்கு வந்தவுடன் பார்த்தால் நிதிநிலைமைக்கு ஏற்றாற்போல் தான் ஒவ்வொன்றையும் செய்ய முடியும்.

இந்த ஆட்சியைப் பொறுத்தளவிற்கு மக்களுடைய முக்கியமான பிரச்சினைகள் என்னவோ அவைகளெல்லாம் ஏறத்தாழ 90 சதவிகிதம் சரி செய்து இருக்கிறோம். சொல்லாத வாக்குறுதிகளையும் முதலமைச்சர் அவர்கள் செய்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் அவருக்கு பாராட்ட மனமில்லை. பரவாயில்லை. ஆனால், அ.தி.மு.க. ஆட்சியில் இருக்கும் போதே தேர்தல் அறிக்கையை அளித்தீர்கள். 58 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் இலவச பஸ் பாஸ் என்று சொன்னீர்கள். அனைவருக்கும் கொடுத்துவிட்டீர்களா இல்லை. சென்னை, மதுரை, திருச்சி மற்றும்கோவையில்மோனோ இரயில் திட்டம். நான் அப்போது எதிர்க்கட்சியில் இருந்தேன். அந்தத் திட்டத்தை அறிவிக்கின்றபோது அவ்வளவு கைத் தட்டல்கள். மேசையே உடைந்துவிடும் என்று நான் யோசித்தேன். அந்த அளவிற்கு கை தட்டினீர்கள். ஆனால், அந்தத் திட்டம் நடக்கவில்லை. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றிய தலைமையகங்களிலே முதியோர் மற்றும் ஆதரவற்றவர்களுக்கு தனியாக ஒரு காப்பகம் அமைக்கப்படும் என்று தேர்தல் அறிக்கையில் கூறினீர்கள். அந்தத் திட்டமும் கொண்டு வரப்படவில்லை. அதோடு மட்டுமல்ல; தமிழ் நாட்டில் வீடு இல்லாத அனைவருக்கும் 3 சென்ட் இடம் கொடுக்கிறோம் என்று கூறினீர்கள் அதனை நிறைவேற்றினீர்களா?

ரேஷன் கார்டு வைத்திருப்பவர்களுக்கெல்லாம் இலவசமாக செல்போன் வழங்கப்படும் என்று சொன்னீர்கள் அதனை கொடுத்துவிட்டீர்களா? ரேஷன் கார்டு வைத்திருப்பவர்களுக்கெல்லாம் பொங்கல் பண்டிகைக்காக Cooptexல் எடுத்தால் 500 ரூபாய் மதிப்புள்ள coupon வழங்குகிறோம் என்று சொன்னீர்கள். நானும் எதிர்க்கட்சியாக இருக்கும்போது வரும் வரும் என்று பார்த்தேன் அந்த couponம் வரவில்லை. அரசு ஊழியர்களுக்கு பழைய ஓய்வூதிய திட்டத்தை ஏனென்றால், 2003 ஆம் ஆண்டு அரசு ஊழியர்களுக்கு ஓய்வூதிய திட்டத்தை நிறுத்தியது அப்பொழுது முதலமைச்சராக இருந்த அம்மையார் அவர்கள். அவர்களை நான் விமர்சனம் செய்யவில்லை. ஆண்டிற்காக சொல்கிறேன். அப்பொழுது நாங்கள் எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினராக இருந்தோம். பழைய ஓய்வூதிய திட்டத்தை கொண்டு வருவோம் என்று சொன்னீர்கள். ஆனால், கடைசி வரை நீங்கள் அந்தத் திட்டத்தைக் கொண்டு வரவில்லை. அம்பேத்கர் அறக்கட்டளை நிறுவப்படும் என்று சொன்னீர்கள். அதிலும் ஒன்றும் நடக்கவில்லை. அம்மா வங்கி அட்டை வழங்குகின்ற திட்டம் வழங்கப்படும் என்று தேர்தல் அறிக்கையில் நீங்கள் தான் கூறினீர்கள். தேர்தல் அறிக்கை புத்தகம் இரண்டு வைத்திருக்கிறேன்.

மீனம்பாக்கம் - செங்கல்பட்டு இடையே உயர்மட்ட நெடுஞ்சாலை மேம்பாலம், இந்தத் துறையின் சார்பாக, இப்போது நான் வகிக்கிற பதவி. ஆனால், நீங்கள் கட்டுவீர்கள் என்று பார்த்தோம். கடைசி வரையில் நீங்கள் கட்டவில்லை. இலங்கையில் இருந்து வந்த தமிழ் அகதிகளுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்கப்படும் என்று நீங்கள் சொன்னீர்கள், அதுவும் நடக்கவில்லை. கட்டணமில்லா இலவச 2G இணைய வசதி மாணவர்களுக்கெல்லாம் தந்துவிடுவோம் என்று சொன்னீர்கள், நடக்கவில்லை. முல்லைப் பெரியாறு அணை நீர்த்தேக்கத்தை 152 அடி உயர்த்துவோம் என்று சொன்னீர்கள், நடக்கவில்லை. அரசு ஊழியர்களுக்கு கட்டடம் கட்ட முன்பணம் 40 இலட்சம் ரூபாய் வரை வழங்குவோம் என்று சொன்னீர்கள், நடக்கவில்லை. மீனவர்களை பழங்குடியினர் பட்டியலில் சேர்ப்போம் என்று ரொம்ப அழுத்தமாகச் சொல்லி இருந்தீர்கள், நடக்கவில்லை. தமிழகத்தில் ஓடும் ஆறுகளை இணைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னீர்கள், நடக்கவில்லை.

வீட்டில் இருப்பவர்களுக்கு, ஒவ்வொருவருக்கும் அரசு வேலை தருவோம், வீட்டில் இருப்பவர்களுக்கெல்லாம் ஒவ்வொருவருக்கும் அரசு வேலை தரப்படும் என்று சொன்னீர்கள், நடக்கவில்லை. வேலைக்குச் செல்லும் மகளிருக்கு scooter வாங்குவதற்காக 50 சதவிகிதம் மானியம் வழங்கப்படும், மகளிர் யாரெல்லாம் scooter கேட்கிறீர்களோ அவர்களுக்கெல்லாம் 50 சதவிகிதம் வழங்கப்படும் என்று சொன்னீர்கள், நடக்கவில்லை. சிறு, குறு, பெரிய திரைப் படங்களுக்கு, ஏனென்றால், நான் distributor ஆக இருந்தேன், திரைப்படத் தயாரிப்பாளராக இருந்தேன். பல தயாரிப்பாளர்கள் என்னிடம் சொன்னார்கள்.

இதுமாதிரி 100 கோடி ரூபாயில் கடன் பெறுவதற்கு வசதியாக புதிய ஆணையம் வைக்கப் போகிறார்களாம் என்று பல நண்பர்கள் என்னிடம் கேட்டார்கள், ஒன்றும் நடக்கவில்லை. அதோடுமட்டுமல்ல, 80 கோடியில் தென் பகுதியில் இருக்கிற விவசாயிகளுக்கு-யார்? பேசுகிற சட்டமன்ற உறுப்பினர் என்னுடைய அருமை நண்பர், முன்னாள் அமைச்சர் தங்கமணி பகுதியைச் சார்ந்திருக்கிற விவசாயிகளாக இருக்கிற அந்த தென்னை விவசாயிகளுக்கு 800 கோடி ரூபாயில் தென்னங்கன்று நடவுத் திட்டம் என்ற ஒரு புதிய திட்டத்தை கொண்டு வரப் போகிறோம் என்று சொன்னீர்கள், நடக்கவில்லை. அதைவிட கல்லூரியிலே படிக்கிற மாணவர்கள் வாங்கி இருக்கிற வங்கிக் கடனை இந்த அரசு முழுமையாக ஏற்றுக்கொள்ளும் என்று சொன்னீர்கள், அதுவும் நடக்கவில்லை. ஆக இவ்வளவும், தேர்தல் அறிக்கையில் வாசித்து ஒன்றும் நடக்கவில்லை. ஆனால், இந்த ஆட்சியில் ஏறத்தாழ 90 சதவிகித பணிகள் நிறைவு பெற்றதோடு மட்டுமல்ல, சொல்லாததை எல்லாம் முதலமைச்சர் அவர்கள் சிறப்பாக செய்திருக்கிறார்கள், (மேசையைத் தட்டும் ஒலி) நாட்டு மக்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். பாராட்ட உங்களுக்கு நல்ல மனது இல்லை. தங்கமணி அவர்கள் நல்ல சட்டமன்ற உறுப்பினர், நல்ல முன்னாள் அமைச்சர், பாராட்டுவார் என்று பார்த்தேன்; ஒன்றும் நடக்கவில்லை.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு பேசினார்.




